ISO-14001 : 2004

**நாமக்கல் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.கா.சென்னுகிருஷ்ணன்,எம்.ஏ.,**

**ந.க.எண்.7547/2023/எப்1,** **நாள்: 13.02.2024.**

**பொருள் :** மனைப்பிரிவு – நாமக்கல் நகராட்சி – பெரியப்பட்டி கிராமம்– சர்வே எண்.448/7B-இல் 0.1450 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது – இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(UD4(3)) துறை, நாள்.04.05.2017.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். NKL/D4YGFVV4/16113 /2023/TCP,நாள். 21.07.2023.
3. திரு.சந்தோஷ்குமார், 3/271B, மணியாரம்புதூர், தொட்டிப்பட்டி, வள்ளிபுரம், நாமக்கல் என்பவரின் விண்ணப்பம். நாள்.11.12.2023.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு கடிதம். நாள்.10.01.2024.

******

**உத்திரவு:–**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம், சர்வே எண்.448/7B-இல் 0.1450 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள உத்தேச குடியிருப்பு மனைக்கு உட்பிரிவு செய்து தரக்கோரி தங்களால் நேரிடையாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதை, பார்வை–2இல் கண்டுள்ள நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவில் மனை உட்பிரிவிற்கு **SWP/DTCP/ NAMAKKAL/LAYOUT NO.386/2023** தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்படி மனை உட்பிரிவிற்கு பார்வை–1இல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளப்படி இந்நகராட்சிக்கு மனை உட்பிரிவு கட்டணம் ரூ.10,000/– வளர்ச்சி கட்டணம் ரூ.5000/–, விளம்பர பலகை கட்டணம் ரூ.1500/– மற்றும் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.1000/– ஆகியவை நகராட்சி கருவூலத்தில் **(இரசீது எண்.051/01/6/23–24/0003306, நாள்.24.01.2024)** செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை–1இல் கண்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள், பொது நிபந்தனைகள், மனை உட்பிரிவு நிபந்தனைகள் மற்றும் பார்வை 2இல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ABCDEF என குறிப்பிட்ட மனைகளுக்கு இறுதி உட்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி.

**பெறுநர்:**

திரு.சந்தோஷ்குமார்,
3/271B, மணியாரம்புதுார்,
தொட்டிப்பட்டி, வள்ளிபுரம்,
நாமக்கல்.

**நகல்.** உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை அலுவலகம், நாமக்கல்– அவர்களின் தகவலுக்கு.

**நகல்.** நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வர், நாமக்கல் நகராட்சி.

**நகல்.** வருவாய் ஆய்வாளர், நாமக்கல் நகராட்சி – காலி மனைகளின் மீது வரி விதிப்பு செய்யும் பொருட்டு.